தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.08.2013**

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் கேரள எல்லையோர மாவட்டங்களில் தென்மேற்குப் பருவமழையின் காரணமாக மழை பெய்து வருகிறது. மற்ற பகுதிகளில் வெப்பச் சலனத்தின் காரணமாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகத்தில் வெள்ளிக்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தேவாலா பகுதியில் 90 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கூடலூர் (70 மி.மீ.), வால்பாறை (50 மி.மீ.), நடுவட்டம் (40 மி.மீ.), சின்னக்கல்லாறு (30 மி.மீ.), உதகை, குந்தா (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**மேட்டூர் கிழக்கு- மேற்குக் கரை கால்வாய்கள் இன்று திறப்பு**



மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் இருந்து வெள்ளிக்கிழமைமுதல் (ஆகஸ்ட் 2) தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

மேட்டூர் அணையில் இருந்து மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடும்படி சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதையேற்று, மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் நடப்பாண்டு பாசனத்துக்காக வெள்ளிக்கிழமைமுதல் (ஆகஸ்ட் 2) தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளேன்.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் 17 ஆயிரத்து 230 ஏக்கர் நிலங்களும், சேலம் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 443 நிலங்களும், நாமக்கல் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 327 ஏக்கர் நிலங்களும் ஆக மொத்தம் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

**கிள்ளியூர் வட்டார விவசாயிகள் கலந்துரையாடல்**

கிள்ளியூர் வட்டார விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி கிள்ளியூர் ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு திற்பரப்பு, அருவிக்கரை பொதுப்பணித்துறை பகிர்மான குழுத் தலைவர் குணசீலன் தலைமை வகித்தார். கிள்ளியூர் வட்டார வேளாண்மை இயக்குநர் ஆல்பிரட் ராபின்சன் முன்னிலை வகித்தார்.

வேளாண் பொறியியல் துறை பொறியாளர் சேம் விஸ்வராஜா, தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜான் விஜிபிரகாஷ், கூட்டுறவுத் துறை பதிவாளர் நாகேந்திரன், விற்பனை துறை அலுவலர் ராஜசேகர் ஆகியோர் பேசினர்.

கிள்ளியூர் வட்டார பகுதிகளில் குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரி சீரமைக்க வேண்டும் எனவும், நெல் சாகுபடிக்கு விவசாயிகளுக்கு உரிய உபகரணங்ககளை மானிய விலையில் வழங்க வேண்டும். பயிர் சாகுபடி குறித்து விவசாயிகள் கலந்துரையாடினர். தொடர்ந்து விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு, மகசூல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் முன்னோடி விவசாயிகள், வேளாண் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

**விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மன்னார்குடி கோட்டாட்சியர் அலுவலகம் முன் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வருவாய் நீதிமன்றங்களை மூடி,குத்தகை விவசாயிகளைப் பாதுகாத்திட வேண்டும், எந்த நிபந்தனையுமின்றி கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் (பொ) ஆர். வீரமணி, துணைச் செயலர் பாண்டியன்,இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டத் துணைச் செயலர் வை. செல்வராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர்.

இதில் மன்னார்குடி,நீடாமங்கலம்,கோட்டூர்,வலங்கைமான்,கூத்தாநல்லூர் நகர,ஒன்றிய விவசாய சங்கத்தைச் சேர்ந்த ஏராளமானோர் மேலராஜவீதி,பெரியார் சிலையிலிருந்து ஊர்வலமாக முக்கிய வீதிகளின் வழியே வந்து, கோட்டாட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவாரூரில்.. விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் பி.எஸ். மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப் பாட்டத்தில் மாவட்டத் துணைத் தலைவர்

சிவஞானம், பொருளாளர் பாண்டியன், நிர்வாகிகள் ஜி. ஜெயபால், எஸ். கேசவராஜ், சுப்ரவேல், மாரியப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"பயிர்க் கடன் முகாமில் 416 மனுக்கள்'**

பெரம்பலூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பயிர்க் கடன் முகாமில் 416 மனுக்கள் பெறப்பட்டது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் வட்டத்தில் உள்ள எசனை, அலங்கிழி, குரும்பலூர் தெற்கு, ஆலத்தூர் வட்டத்தில் மேலமாத்தூர், நாரணமங்கலம், வரகுபாடி, குன்னம் வட்டத்தில் நன்னை கிழக்கு, திருமாந்துறை, ஓலைப்பாடி, வேப்பந்தட்டை வட்டத்தில் உடும்பியம், பெரியவடகரை, தொண்டாப்பாடி ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கான பயிர் கடன் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

எசனை, பாளையம், திருமாந்துறை, நன்னை ஆகிய கிராமங்களில் நடைபெற்ற முகாமை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது, பயிர் கடன் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள், முகாம் நடைபெறுவது குறித்து கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பன போன்றவை குறித்த விவரங்களை கேட்டறிந்த பின்னர் கூறியது: முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தகுதி அடிப்படையில், விரைவில் பயிர் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் முதல்கட்டமாக வியாழக்கிழமை நடைபெற்ற பயிர்க்கடன் முகாம்களில் விவசாயிகளிடமிருந்து 416 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. தொடர்ந்து எளம்பலூர், மேலப்புலியூர், தொண்டபாடி, செட்டிக்குளம், மாவிலங்கை மேற்கு, பெருமத்தூர் வடக்கு, பென்னக்கோணம் தெற்கு, பரவாய் மேற்கு, பூலாம்பாடி மேற்கு, நூத்தப்பூர் வடக்கு, அனுக்கூர் ஆகிய வருவாய் கிராமங்களில் ஆக. 5-ம் தேதியும், மேலப்புலியூர் மேற்கு, செங்குணம், ஆதனூர் வடக்கு, சிறுவயலூர், தெரணி, பெருமத்தூர் தெற்கு, ஆண்டிக்குரும்பலூர், வடக்கலூர், பரவாய் கிழக்கு, பிரம்மதேசம் ஆகிய வருவாய் கிராமங்களில் 6-ம் தேதியும், துறைமங்கலம், லாடபுரம் மேற்கு, ஆதனூர் தெற்கு, நக்கசேலம், புது அம்மாபாளையம், அயனாபுரம், சிறுமத்தூர், ஒகளூர் மேற்கு, சு.ஆடுதுறை,

புதுவேட்டக்குடி, தழுதாழை, கை.களத்தூர் மேற்கு, மேட்டுப்பாளையம் மேற்கு ஆகிய வருவாய் கிராமங்களில் 7-ம் தேதியும், பெரம்பலூர் தெற்கு, லாடபுரம் கிழக்கு, கூத்தூர், எளந்தலப்பட்டி, கொளக்காநத்தம், கீழப்புலியூர் வடக்கு, ஒகளூர் கிழக்கு, துங்கபுரம் வடக்கு, அரும்பாவூர், கை.களத்தூர் கிழக்கு, மேட்டுப்பாளையம் வடக்கு ஆகிய வருவாய் கிராமங்களில் 8-ம் தேதியும் சிறப்பு பயிர் கடன் முகாம்கள் நடைபெற உள்ளது என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

**உழவர்களுக்குப் பயிற்சி**

நாகை மாவட்டம்,வேதாரண்யத்தை அடுத்த வாய்மேட்டில் உழவர் மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.

வேதாரண்யம் வட்டாரத்தில் நபார்டு வங்கி உதவியோடு நாம்கோ நிறுவனம் சார்பில் செயல்படும் உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு செல்போன் மூலம் விவசாயம் சார்ந்த தொழில்நுட்பச் செய்திகள் அளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான சிறப்புப் பயிற்சிக்கு நாம்கோ நிறுவன இயக்குநர் சி. ஜீவானந்தம் தலைமை வகித்தார். ஆர்.எம்.எல். நிறுவனம் மூலம் அனுப்பப்படவுள்ள தொழில் நுட்பங்கள் தொடர்பான பயிற்சியை,நபார்டு பிராந்திய மேலாளர்கள் ஆர். புவீந்திரன்,

செல்வமணி உள்ளிட்டோர் அளித்தனர்

**விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி கடன் வழங்க வலியுறுத்தல்**

விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி கூட்டுறவு கடன் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் நீடாமங்கலம் ஒன்றிய ஆண்டு பேரவைக் கூட்டம் ஆதனூர் சமத்துவபுரத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. ஒன்றியத் தலைவர் எஸ்.

கலியபெருமாள் தலைமை வகித்தார். ந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மணலி ஜி. நேதாஜி,விவசாயிகள் சங்க மாவட்ட துணைச் செயலாளர் பி.ஆர். பாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலர் நடேச. தமிழார்வன், விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் கே. ராவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர். ஒன்றிய தலைவராக கே. பாரதிமோகன், ஒன்றிய செயலாளராக வி.பி. பாலதண்டாயுதம், பொருளாளராக எம். ராமச்சந்திரன் உள்ளிட்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் நிகழாண்டில் சாகுபடி பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எந்தவித நிபந்தனையும் இன்றி சாகுபடி தொடங்கும் முன் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கால்நடைப் பண்ணை தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

தஞ்சாவூர் ரயிலடியில் தமிழ்நாடு அரசு மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகப் பண்ணைத் தொழிலாளர்கள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி வியாழக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஒரத்தநாட்டில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பெருக்கப் பண்ணையில் பணிபுரியும் தினக்கூலி தொழிலாளர்களைத் தற்போது சுய உதவிக் குழு என்ற பெயரால் வேலைக்கு எடுத்து சம்பளம் கொடுப்பதைக் கைவிட்டு, பண்ணை நிர்வாகங்கள் நேரடியாக வருகைப் பதிவேடு மூலம் நேரடியாக ஊதியம் கொடுக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் அறிவித்தபடி கூலி உயர்வு ரூ. 51 என்பதை ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பெருக்கப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு 1.4.2013 முதல் நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும். இரண்டு ஆண்டுகளில் 480 நாள்கள் பணி முடித்தவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சங்கத்தின் மாநிலச் செயலர் உ. அரசப்பன் தலைமை வகித்தார். ஏஐடியுசி மாநிலச் செயலர் சி. சந்திரகுமார், மாவட்டத் தலைவர் ஆர். தில்லைவனம், உடலுழைப்பு தொழிலாளர் சங்கம் வெ. சேவையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 108.63 அடியாக இருந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 108.63 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 17,894 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 10,025 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

sதிருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அட்மா திட்ட விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் இரா. பெரியசாமி தலைமை வகித்தார். அட்மா திட்டத் தலைவர் அம்மணி பச்சையப்பன் முன்னிலை வகித்தார்.

வேளாண் வணிக துணை இயக்குநர் பாலகிருஷ்ணன், தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொறுப்பு) சந்திரன், கால்நடை உதவி மருத்துவர் ராஜேஸ்வரி ஆகியோர் பேசினர். கூட்டத்தில், 2013-14-ம் ஆண்டு அட்மா திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ள செயல் விளக்கம், பண்ணைப் பள்ளிக்கு விவசாயிகளை தேர்வு செய்து அனுப்புவது குறித்து விவாதிக்கப்பட்டது.

**நீலகிரி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு..**

தமிழக அரசின் இரண்டாவது பசுமைப்புரட்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீலகிரி மாவட்டத் தோட்டக்கலை இணை இயக்குநர் மணி தெரிவித்துள்ளதாவது:

தமிழக முதல்வரின் இரண்டாவது பசுமைப்புரட்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் தங்களது நிலத்தை மண் ஆய்வு செய்து அதற்கு தகுந்தாற்போல் உரத்தினை இட்டு பயனடையும் பொருட்டும், தோட்டக்கலைத் துறையின் கீழ் மானியம் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் ஒருங்கிணைந்த விவசாய கையேடு வைத்திருப்பவர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் அவரவர் பகுதிகளின் உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது துணை வேளாண்மை அலுவலரையோ உடனடியாக அணுகி தங்களது நிலத்தின் மண் மாதிரியை ஆய்வு செய்து கொள்வதோடு, ஒருங்கிணைந்த விவசாய கையேடும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மண் மாதிரியிலும் உள்ள கார, அமில நிலை, தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் அளவு மற்றும் உர பரிந்துரைக் கேற்ப ரூ.20 கட்டணமாக செலுத்த வேண்டும்.

விவசாயிகள் நேரடியாகவும், உதகையில், ரோஜாப் பூங்கா வளாகத்தில் செயல்படும் மண் ஆய்வுக் கூடத்திற்கு மண் மாதிரிகளை அளித்தும் தேவையான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான கூடுதல் விபரங்களை மாவட்டத்தில் அவரவர் பகுதிகளில் செயல்படும் வேளாண்மை விரிவாக்க மையங்களையோ அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநரையோ நேரில் அணுகி தேவையான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 74.88 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,854 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,000 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 13.12 டி.எம்.சி.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 75.16 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 75.16 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 4,564 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 950 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 13.26 டி.எம்.சி.

**கொப்பரை விலை அதிகரிப்பு:மகிழ்ச்சியில் விவசாயிகள்**

மொடக்குறிச்சி அருகே எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரைத் தேங்காய் விலை அதிகரித்துள்ளது.

இங்கு தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் ஏலம் புதன்கிழமை நடைபெற்றது. ஏலத்துக்கு மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியைச் சார்ந்த விவசாயிகள், 187 மூட்டைகளில் 5000 கிலோ கொப்பரையையும், 15,675 தேங்காய்களையும் விற்பனைக்காகக் கொண்டு வந்தனர்.

இதில் முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.47.15, குறைந்தபட்ச விலையாக ரூ.44.85, 2-ம் தர கொப்பரைத் தேங்காய அதிகபட்ச

விலையாக ரூ.43.15, குறைந்தபட்ச விலையாக ரூ.35.60 என மொத்தம் ரூ.2 லட்சத்து 27 ஆயிரத்துக்கு விற்பனையானது.

தேங்காய் அதிகபட்ச விலையாக ஒரு டன் ரூ.13 ஆயிரத்து 900-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.10 ஆயிரத்து 326-க்கும் என மொத்தம் ரூ.69 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

மொத்தம் தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் ரூ.2 லட்சத்து 96 ஆயிரத்துக்கு ஏலம் மூலம் விற்பனையானது. கடந்த வாரத்தைவிட தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காயின் விலை சற்று அதிகரித்துள்ளது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஒருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறக்க மேலூர் எம்.எல்.ஏ. கோரிக்கை**

மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் ஒருபோக சாகுபடி விவசாயத்துக்கு ஆகஸ்ட் 15-ல் தண்ணீர் திறந்துவிடவேண்டும் என தமிழக முதல்வருக்கு, மேலூர் தொகுதி எம்.எல்.ஏ. ஆர். சாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வருக்கும், மதுரை மாவட்ட ஆட்சியருக்கும் அவர் விடுத்துள்ள கோரிக்கை விவரம்: பெரியாறு-வைகை அணைகளில் வழக்கமாக ஆகஸ்ட் 15-இல் தண்ணீர் திறந்து விடப்படும்.

அப்போது இரு அணைகளிலும் சேர்த்து 6 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் இருப்பு இருக்கவேண்டும் என கணக்கு உள்ளது. தற்போது இரு அணைகளிலும் சேர்த்து 6 மில்லியன் கனஅடிக்கும் மேல் நீர் இருப்பு உள்ளது.

கள்ளந்திரி மதகு வரையிலான இருபோக சாகுபடி பகுதிகளுக்கு கடந்த மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அப்பகுதியில் நாற்று விட்டு, தற்போது உழவுப் பணிகளைத் தொடங்கி உள்ளனர்.

எனவே, வழக்கம்போல ஆகஸ்ட் 15-இல் தண்ணீர் திறக்கப்பட்டால், வடகிழக்குப் பருவமழையை நன்கு பயன்படுத்தி விவசாயிகள் பயனடைவர்.

மேலும் பெரியாறு பாசன கிளை கால்வாய்களை தூர்வாரி சுத்தப்படுத்த பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.08.2013**

## வெண்டை விலை குறைந்தது கிலோ ரூ.19 க்கு விற்பனை

ஒட்டன்சத்திரம்:வரத்து அதிகரித்துள்தால், ஒட்டன்சத்திரத்தில் வெண்டைக்காய் விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ரூ.19 க்கு விற்றது.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகள் மற்றும் மணப்பாறை பகுதிகளில் இருந்து மார்க்கெட்டிற்கு வெண்டைக்காய் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இதன் விலை நாளுக்கு நாள் இறங்கு முகமாக காணப்படுகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ வெண்டை ரூ.25 க்கு விற்றது. நேற்று முன்தினம் இதன் விலையில் ரூ. 2 குறைந்து ரூ.23 க்கு விற்றது. நேற்று முன்தினம் இதன் விலை மேலும் வீழ்ச்சி அடைந்து, கிலோவிற்கு ரூ.4 வரை குறைந்து ரூ.19 க்கு விற்றது. இரண்டு நாட்களில் கிலோவிற்கு ரூ.6 வரை குறைந்துள்ளது.

வியாபாரி சண்முகம் கூறுகையில்;"" வரத்து அதிகரித்துள்ளதால், வெண்டை விலையில் சரிவு நிலை காணப்படுகிறது. இனி வரும் நாட்களில் இதன் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

வெண்டைக்காயின் மொத்த கொள்முதல் விலை குறைந்திருந்த போதிலும் வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

## பூ விலை அதிகரிப்பு

திண்டுக்கல்:மழை இல்லாமல் விளைநிலங்களில் செடிகள் காய்ந்துபோனதால் பூக்களின் விலை திண்டுக்கல்லில் அதிகரித்துள்ளது.

ஆடி வெள்ளியை முன்னிட்டு திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் வாடிக்கையாளர்கள் கூட்டம் நேற்று அதிக அளவில் இருந்தது. மழை இல்லாமல் விளை நிலங்களில் செடிகள் காய்ந்ததால் பூ வரத்து மிகவும் குறைந்திருந்தது. அனைத்து பூக்களும் அதிக விலையில் விற்கப்பட்டன. மல்லி கிலோ ரூ. 250, முல்லை ரூ. 200, சம்பங்கி ரூ. 150, ரோஸ் ரூ. 170, காக்கரட்டை ரூ. 220, கனகாம்பரம் ரூ. 300, செண்டு மல்லி ரூ. 40, கோழி கொண்டை ரூ. 40, பிச்சிப்பூ ரூ. 170 க்கு விற்கப்பட்டது.

## இயந்திரம் மூலம் சாகுபடி தொழில் நுட்ப விளக்கம்

கோபிசெட்டிபாளையம்: மைராடா வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் இயந்திரம் மூலம் நெற்பயிர் சாகுபடி குறித்த, தொழில் நுட்பம் செயல் விளக்கம், கோபியில் நடந்தது.

மைராடா வேளாண் அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகேசன், வேளாண் பொறியாளர் ஜான்பிரபாகரன் ஆகியோர் கூறியதாவது:

தட்டு முறை நாற்றாங்கால் அமைக்கும்போது, ஒரு ஏக்கருக்கு, 12 கிலோ விதை போதுமானது.

இது உற்பத்தி செய்யப்படும் நாற்றுக்கள் திடகாத்திரமாகவும், இயந்திரம் மூலம் நடவு செய்ய மிகவும் ஏற்றதாக உள்ளது.

நாற்று நட்ட பின், 10, 20, 30 ஆகிய நாட்களில் விசை களைக்கருவி கொண்டு பயன்படுத்தும்போது, 30 சதவீதம் களை எடுப்பதற்கான அளவு குறைக்கப்படுகிறது.

அதிகளவில் பயிர் தூரிடப்பட்டு, மகசூல் உற்பத்தியில் ஏக்கருக்கு, 200 கிலோ வரை அதிகரிக்கப்படுகிறது. இயந்திரத்தை பயன்படுத்தும்போது வேலையாட்கள் பற்றாக்குறை தவிர்ப்பது மட்டுமல்லாமல், உரிய நேரத்தில் பணி செய்து முடிக்கப்படுகிறது,. என்றனர்.

## உச்சத்தில் "இளநீர் விலை' பொதுமக்கள் திண்டாட்டம்

திருச்சியில், கோடைக்காலம் முடிந்தும், வெயிலின் தாக்கம் குறையாததால், இளநீருக்கு "மவுசு' அதிகரித்துள்ளது. இதனால், இளநீர் விலை உச்சத்தில் இருப்பதால், பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

கோடை காலம் முடிந்தும், திருச்சியில் வெயிலின் தாக்கம் குறையவில்லை. தற்போது ஆடி மாதம் பலத்த காற்றாலும், பொதுமக்கள், வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

இவர்களின் நிலையை கருத்தில் கொண்டு, சாலையோரங்களில், இளநீர், குளிர்பானங்கள், கம்மங்கூல் பதார்த்த கடைகள் போன்றவை அதிகளவில் முளைத்துள்ளன. இதில், பொதுமக்களின் பார்வை இளநீர் கடைப்பக்கமே திரும்புகிறது. இதனால், ஏப்ரல், மே மாதங்களில் விற்றதை போல, இம்மாதமும் இளநீர் விலை குறையாமல் உச்சத்திலேயே உள்ளது. முக்கிய இடங்களுக்கு தகுந்தாற்போல், வியாபாரிகள் இளநீருக்கு விலை நிர்ணயிக்கிறார்கள். இளநீர் ஒன்று 30 ரூபாய் முதல் 45 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இதுகுறித்து, பொதுமக்கள் கூறுகையில், ""எவ்வித ரசாயன கலப்பும் இல்லாதது இளநீர் தான். கொளுத்தும் வெயிலால், வியாபாரிகள் இளநீர் விலையை குறைக்காமல், அதிக விலைக்கே விற்பனை செய்கிறார்கள். இளநீர் குடிக்கலாம் என்று நினைப்பதையே மறந்து விடும் அளவுக்கு இருக்கிறது. இருப்பினும், சில இடங்களில், இளநீர் கிடைப்பதில்லை,'' என்றனர்.

இதுகுறித்து, இளநீர் வியாபாரிகள் கூறுகையில், ""முன்புபோல், இளநீர் வியாபாரம் கிடையாது. இளநீர் அதிகளவில் கிடைப்பதில்லை. இளநீர் இருப்புக்கு ஏற்ப விலை வைத்து விற்றால் தான், லாபம் பார்க்க முடியும்,'' என்றனர்.

## விவசாய பணிக்கு சென்றால்முழு சம்பளம் கிடைக்கும்

மதுராந்தகம்:கிராமப்புற மக்களின் வறுமையை கருத்தில் கொண்டு, ஆண்டுக்கு நூறு நாள் வேலை கொடுக்கும் வகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை, கடந்த 2005ம் ஆண்டு முதல், மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் உள்ள தொழிலாளர்கள், இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டனர்.இத்திட்டத்தின் மூலம், சாலை சீரமைப்பு, ஏரி பராமரிப்பு உள்ளிட்ட சில பணிகள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டு முதல், பணியாளர்களுக்கு தினசரி சம்பளமாக, 148 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் செய்யும் பணியின் அளவை ஆய்வு செய்து, அதற்கேற்றவாறு சம்பளம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், அறிவிக்கப்பட்ட சம்பள தொகையை தராமல், குறைவாகவே அதிகாரிகள் தருவதாக, பணியாளர்கள் புகார் கூறுகின்றனர். முழு சம்பளத்தையும் தர வலியுறுத்தி, கிராமங்கள் தோறும் அவ்வப்போது மறியல், முற்றுகை போராட்டங்கள் நடந்து வருகின்றன. இந்நிலையில், விவசாய பணிகளுக்கு சென்றால், முழு சம்பள தொகையான 148 ரூபாயும் வழங்கப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து, அச்சிறுபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) கூறுகையில்,

""விவசாயம் செய்ய, தேவைக்கு ஏற்றவாறு, நூறு வேலைவாய்ப்பு பயனாளிகளை அனுப்புகிறோம். விவசாய பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு, ஒரு நாள் கூலியாக 148 ரூபாய் வழங்கப்படும்,'' என்றார்.

## ஆக., 6ல் கருணை கிழங்கு சாகுபடி குறித்து பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு மறறும் கறிவேப்பிலை சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 6ம் தேதி, கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு மற்றும் கறிவேப்பிலை சாகுபடி குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது.

பயிற்சியில், கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு மற்றும் கறிவேப்பிலையில் புதிய ரகம், பயிர் இடைவெளி, உரமிடுதல், சொட்டுநீர் பாசன முறை நீர் நிர்வாகம், களை நிர்வாகம் ஆகியவை குறித்து விளக்கிக் கூறப்படுகிறது.

பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம்.

பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளோர், வரும், 5ம் தேதிக்குள் நேரில் அல்லது, 04286 - 244345, 266650, 266244 ஆகிய ஃபோன் எண்களை தொடார்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 02.08.2013

### ஒரே மாதத்தில் மஞ்சள் விலை ரூ.1,200 சரிவு இருப்பு வைத்த விவசாயிகள் ஏமாற்றம்



ஈரோடு : ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு தமிழக, கர்நாடகா வியாபாரிகளால் மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதம் விரலி மற்றும் கிழங்கு மஞ்சள் குவிண்டால் ரூ.8,500 முதல் ரூ.9,000க்கு விற்பனையானது. கடந்த ஆண்டு இதே காலத்தில் மஞ்சள் விலை அதிகரித்து காணப்பட்டதால் இந்த ஆண்டு கட்டாயம் மஞ்சள் விலை அதிகமாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தொடர்ந்து மஞ்சள் விலை வீழ்ச்சியடைந்திருப்பது விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.7,000 முதல் ரூ. 7,500 ஆக இருந்த நிலையில் தற்போது ஆயிரம் ரூபாய் முதல் ரூ.1,200 வரை வீழ்ச்சியடைந்து வெளி மார்க்கெட்டில் குவிண்டால் ரூ.6 ஆயிரத்துக்கும் குறைவாகவே விலை போகிறது. விலை வீழ்ச்சிக்கான காரணம் குறித்து ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ரவிசங்கர், செயலாளர் துரைசாமி

ஆகியோர் கூறியதாவது: வடமாநிலங்களில் தேவை குறைந்து போனதாலும், ஆன்லைன் மூலம் மஞ்சள் கொள்முதல் குறைந்ததாலும் மஞ்சள் விலை கடும் வீழ்ச்சிடைந்துள்ளது.

கடந்த மாதம் குவிண்டாலுக்கு ரூ.7 ஆயிரம் முதல் ரூ. 7,500 ஆக இருந்த மஞ்சள் விலை மேலும் உயரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருப்பு வைத்தனர். ஆனால், தற்போது மஞ்சள் விலை ரூ.6 ஆயிரம் முதல் ரூ.6,300 ஆக வீழ்ச்சியடைந்து விட்டது. இன்னும் விலைவீழ்ச்சியடைந்து விடுமோ என்ற எண்ணத்தில் தற்போது விவசாயிகள் மஞ்சளை அதிகளவில் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். வியாழனன்று மட்டும் (நேற்று) ஒரே நாளில் 5,200 மஞ்சள் மூட்டை விற்பனைக்காக வந்த நிலையில் 60 சதவீதம் மட்டுமே விற்பனையானது.

நடப்பு 2013ம் ஆண்டு ஈரோடு மஞ்சள் மார்க்கட் டில் மட்டுமே புதுமஞ்சள் வரத்து குறைந்துள்ளது. அதேசமயம் நாட்டில் மஞ்சள் அதிகம் விளையும் ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் கடந்த 2012ம் ஆண்டு இருந்த அதே அளவிற்கான மஞ்சள் வரத்து இந்த ஆண்டிலும் நீடிக்கிறது. இதனால் ஆந்திராவின் நிஜாமாபாத், மகாராஷ்டிராவின் சாங்கிலி மஞ்சள் மார்க்கட்டிலும் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.6 ஆயிரத்தை விட குறைவாகவே உள்ளது.

ஆனால், இந்தியாவின் அனைத்து மஞ்சள் மார்க்கட்டிலும் விலை வீழ்ச்சியடைந்து உள்ளதால் ஈரோடு மஞ்சளின் விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆன்லைனிலும் மஞ்சளுக்கு குறைந்த விலையே நிர்ணயிக்கப்படுவதால் விலை வீழ்ச்சி நீடிக்கிறது. இதுமட்டுமின்றி கொல்கத்தா, புவனேஷ்வர், மும்பை போன்ற பகுதிகளை சேர்ந்த மஞ்சள் வியாபாரிகள் குவிண்டால் ரூ.3 ஆயிரத்துக்கு மஞ்சள்

விற்கும் போதே ஆயிரக்கணக்கான மூட்டைகளை வாங்கி ஸ்டாக் வைத்து கொண்டனர்.

மொத்த வியாபாரிகளிடம் ஸ்டாக் கில் உள்ள மஞ்சள் மூட்டைகள் விற்பனையாகும் வரை புதிய மஞ்சளுக்குவிலை உயர வாய்ப்பில்லை என்றனர். 2010ம் ஆண்டு கடைசியாக ஒரு குவிண்டால் மஞ்சள் உச்சபட்சமாக ரூ.17,500க்கு விற்றது. அதற்கு முன்பு வரை அதிகபட்சமாக குவிண்டால் ரூ.10,000 வரை தான் விலை போனது. 2010க்கு பிறகு மஞ்சள் சரிவையே சந்திக்கிறது.

எக்ஸ்ட்ரா தகவல்

மஞ்சளுக்கு 1995ம் ஆண்டில், அமெரிக்காவின் மிசிசிப்பி மருத்துவ மையத்துக்கு அந்நாட்டின் காப்புரிமை வழங்கப்பட்டது. இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து 1997ல் காப்புரிமை ரத்து செய்யப்பட்டது.

**காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணை இன்று திறப்பு**



மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர் மட்டம் 108 அடியை தாண்டி உள்ளது. இதையடுத்து, டெல்டா பாசனத்துக்கு இன்று அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலம் 12 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை, சம்பா, தாளடி சாகுபடிக்காக ஆண்டுதோறும்

ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். கடந்த ஜூன் மாதம் அணையின் நீர்மட்டம் 15 அடியாக குறைந்ததால்,

பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை உருவானது. இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில், கடந்த ஒரு மாதமாக தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால், ஜூன் 25ம் தேதி அங்குள்ள கபினி அணை நிரம்பி, உபரி நீர் திறக்கப்பட்டது. அங்குள்ள கிருஷ்ணராஜசாகர் அணையும் கடந்த 10 நாட்களுக்கு முன் நிரம்பியது. இதைத்தொடர்ந்து, இரு அணைகளிலும் இருந்து அதிக அளவுக்கு நீர் திறக்கப்பட்டதால் மேட்டூர் அணையின் நீர்மட்டமும் கிடுகிடுவென உயர்ந்தது. 15 அடியாக இருந்த நீர்மட்டம் 35 நாட்களில் 108.49 அடியாக உயர்ந்துள்ளது.

தற்போது, கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரியத் தொடங்கி உள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அணைக்கு விநாடிக்கு 35,557 கனஅடி நீர் வந்துக் கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் விநாடிக்கு 10,801 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்மட்டம் 108.49 அடியாக உள்ளது. நீர் இருப்பு 76.28 டிஎம்சி.

கபினி மற்றும் கேஆர்எஸ் அணைகளில் இருந்து நீர் திறப்பு விநாடிக்கு 23 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளதால், மேட்டூருக்கு நீர்வரத்து மேலும் சரிவடையும் என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். இதனிடையே, மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பகுதி சம்பா சாகுபடிக்காக இன்று மதியம் 12.30 மணிக்கு நீர் திறக்கப்படுகிறது. முன்னதாக சிறப்பு பூஜைகள் செய்யப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் இடைப்பாடி பழனிசாமி, தோப்பு வெங்கடாசலம், கே.வி.ராமலிங்கம், கலெக்டர் மகரபூஷணம் மற்றும் பிரமுகர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு, அணையின் இடதுகரையில் உள்ள மேல்மட்ட மதகுகளை மின்விசை மூலம் இயக்கி பாசனத்துக்கு தண்ணீரை திறந்து விடுகின்றனர். இதன் மூலம் காவிரி டெல்டா பகுதிகளில் சுமார் 12 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் தயாராக உள்ளனர். அணை வரலாற்றில் பாசனத்துக்காக 80வது ஆண்டாக நீர் திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு டெல்டா பாசனத்துக்கு செப்டம்பர் 17ம் தேதி தான் நீர் திறக்கப்பட்டது. ஜனவரி 28ம் தேதி வரை நீர் திறக்கப்பட வேண்டிய நிலையில், அணையில் போதிய நீர் இல்லாததால் டிசம்பர் 22ம் தேதியே அணை மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

120 டிஎம்சி தேவை

காவிரி டெல்டா பகுதிகளில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி சாகுபடிக்கு 330 டிஎம்சி நீர் தேவை. இந்த ஆண்டு குறுவை சாகுபடி நடைபெறாததால், சம்பா சாகுபடிக்கு மட்டும் 120 டிஎம்சி நீர் தேவைப்படும். தற்போது அணையில் 76 டிஎம்சி நீர் உள்ளது. டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை அதிக அளவில் பெய்யும் என்பதால் தண்ணீர் தேவை குறையும். மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சீராக இருந்தால், சம்பா மற்றும் தாளடி பயிர்கள் எந்தவித பாதிப்பும் இல்லாமல் சாகுபடி நிறைவடையும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**நெல், வாழை பயிர்கள் பாதிப்பு**

கருங்கல்: பட்டணம் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் விழுந்தயம்பலம், அரசகுளம் ஆகிய கடைவரம்பு பகுதிகளுக்கு தண்ணீர் செல்லவில்லை. இதனால் நெல், வாழை பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.குமரி மாவட்டம் விளவங்கோடு, கல்குளம் தாலுகா பகுதிகள் பாசனம் பெறும் வகையில் பேச்சிப்பாறை, சிற்றாறு அணை களில் இருந்து தண்ணீர் கொண்டு செல்ல சிற்றாறு பட்டணம் கால்வாய் அமைக்கப்பட்டது. இது, குலசேகரம் தும்பகோட்டில் தொடங்கி பரளியாறு, மாத்தூர் தொட்டிபாலம் வழியாக நட்டாலம் மெயின்கால்வாயில் வந்து அங்கிருந்து பல்வேறு கால்வாய்களாக பிரிந்து கடைவரம்பு பகுதிகளுக்கு செல்கிறது.இதில் தேங்காப்பட்டணம் அருகே அரசகுளம் செல்லும் கால்வாய், புல்லாணியில் இருந்து கிள்ளியூர் செல்லும் சாலையை கல்பொற்றை பகுதியில் கடந்து செல்கிறது. இங்கு சுமார் 30 அடி நீளத்திற்கு தொட்டிப்பாலம் அமைக்கப்பட்டு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.

கடந்த வாரம் இந்த கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. இந்நிலையில் அப்பகுதியில் பெய்த மழையால் திடீரென கால்வாயில் உடைப்பு ஏற்பட்டது. தொட்டிப்பாலத் தின் பக்கவாட்டு காங் கிரீட் சிலாபுகள் பெயர்ந்து விழுந்தன. தண்ணீர் முழுவ தும் வெளியே கொட்டியது. இதையடுத்து பொதுப்பணித்துறை (நீர்வளஆதார அமைப்பு) அதிகாரிகள் மெயின் ஷட்டரை அடைத்து தண்ணீரை கிளை கால்வாய்களுக்கு மாற்றி விட்டனர்.
இதனால் கடந்த 6 நாட் களாக இந்த கால்வாயில் தண்ணீர் வரவில்லை. இதன் மூலம் பாசனம் பெற்ற விழுந்தயம்பலம், அரசகுளம் கடைவரம்பு விவசாய நிலங்களில் நெல், வாழை உள்ளிட்டவை பயிரிடப்பட்டுள்ளன. இவை கடந்த 6 நாட்களாக தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த முறை அணை தண்ணீர் திறந்த போது நட்டாலம் வரைதான் தண்ணீர் வந்தது. கடைவரம்பு பகுதி விவசாயிகள் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருந்தனர். இந்த நிலையில் தற்போது கடைவரம்பு நிலங்களுக்காகவே கலெக்டர் உத்தரவுபடி அணை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் கால்வாய் உடைந்ததால் கடைவரம்பு பகுதிகளுக்கு மீண்டும் தண்ணீர் செல்லவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரபிரிவு செயற்பொறியாளர் சுனந்தாவிடம் கேட்ட போது, உடைப்பை சீர் செய்வது தொடர்பான திட்டமதிப்பீட்டை அரசுக்கு அனுப்பியுள் ளோம். உடனடியாக கால்வாயை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப் படும் என தெரிவித்தார்.

**இலவச கால்நடை தடுப்பூசி முகாம்**

திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ரோட்டரி சங்கம், மன்னார்குடி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் இலவச கால்நடைதடுப்பூசி முகாம் திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் இன்று முதல் துவங்குகிறது. கொருக்கை ஊராட்சியில் இன்று 3 இடங்களிலும், 2ம் தேதி சேகல் ஊராட்சியில் 3 இடங்களிலும், 5ம் தேதி மேட்டுபாளையம் ஊராட்சியில் 3 இடங்களிலும், 6ம்தேதி கொத்தமங்கலம் ஊராட்சியில் 2 இடங்களிலும், 7ம்தேதி நெடும்பலம் ஊராட்சியில் 2 இடங்களிலும், 8ம்தேதி திருதங்கூர் ஊராட்சியில் 1 இடத்தில் , 9ம் தேதி கோமல் ஊராட்சியில் ஆதனு£ர் கிராமத்திலும் ரோட்டரி சங்க தலைவர் பொறியாளர் செல்வகுமார் தலைமையில் நடைபெறுகிறது. முகாம் தினமும் மதியம் 3 முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. கால்நடை

வளர்ப்போர் இந்த வாய்ப்பை கொள்ளுமாறு ரோட்டரி சங்க செய்தி தொடர்பாளர் சதாபத்மநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**குடிநீர், பாசனத்துக்கு அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் கரூர் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை**

கரூர்: கரூர் மாவட்டத்தில் விவசாயம், குடிநீர் தேவைக்கு அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் அமராவதி அணை உள்ளது. திருப்பூர், கரூர் மாவட்டங்களில் அமராவதி பாசனநீரை பயன்படுத்தி 40 ஆயிரம் ஏக்கரில் பயிர் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் பழைய ஆயக்கட்டு பகுதிகள், புதிய ஆயக்கட்டு பகுதிகள் மற்றும் நீரேற்று பாசன பகுதிகள் உள்ளன. அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்காக கடந்தாண்டு 2012 நவம்பர் மாதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதற்கு பிறகு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படாததால் அமராவதி பாசன சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டது.
இந்நிலையில் நடப்பாண்டு நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழையை தொடர்ந்து அமராவதி அணையிலிருந்து கரூர் மாவட்டத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. கடந்த ஜூன் 25ம் தேதி முதல் 5 நாட்கள் வந்த நீர்வரத்து அதன்பிறகு நின்றுவிட்டது.இந்நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக அமராவதி அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வந்தது. அணையின் நீர்மட்டம் 90 அடியாகும். நேற்றைய நிலவரப்படி 80 அடியாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது. பாசனத்திற்காக வினாடிக்கு 1000 கன அடிநீர் திறந்து விடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தண்ணீர் கரூர் மாவட்டத்திற்கு வந்து சேருமா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் நீர் திறப்பின்போது கரூர்

மாவட்டத்திற்கு தண்ணீர் வந்து சேருவதில்லை என்று விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர். எனவே கரூர் மாவட்டம் பயனடையும் வகையில் அணையில் இருந்து தண்ணீரை திறந்துவிட வேண்டுமென பள்ளபாளையம் ராஜவாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபற்றி கலெக்டரிடம் தலைவர் ராஜாமணி பழனிச்சாமி கோரிக்கை மனு கொடுத்துள்ளார். இதுகுறித்து கரூர் வர்த்தகர் சங்க தலைவர் ராஜூ விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த ஒரு மாதமாக அமராவதி அணையில் இருந்து சிறிது சிறிதாக தண்ணீர் திறந்து விடப்பட்டும் கரூர் மாவட்டத்திற்கு வரவில்லை. திருப்பூர் மாவட்டத்திற்கு வந்தும் கரூர் மாவட்டத்திற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தியும் தண்ணீர் வரவில்லை. அதிகாரிகளின் மெத்தனத்தையே இது காட்டுகிறது. கரூர் மாவட்டத்தில் அமராவதி நீர் பாசனத்தை நம்பி நெல், சோளம் பயிரிட்ட விவசாயிகள் தண்ணீரை எதிர்பார்த்துள்ளனர். தென்னை மரங்கள் நீரின்றி காய்கின்றன. எனவே கரூர் மாவட்ட மக்களின் விவசாய தேவைக்கும், குடிநீர் தேவைக்காகவும் உடனடியாக அமராவதி ஆற்றில் இருந்து தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் விவசாயிகளுக்கு அழைப்பு

கரூர்:கரூர் மாவட்டத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. தகுதியான விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கரூர் கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கரூர் மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டில் தேசிய நுண்ணீர் பாசன இயக்க திட்டத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானி யம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க முன்வரும் சிறு குறு

விவசாயிகளின் பெண் கள், ஆதிதிராவிடர் கள் மற்றும் மலை ஜாதியினர், முன்னாள் படைவீரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. கடந்தாண்டில் தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மைத்துறை மூலம் நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டு மாவட்ட உயர்மட்ட குழுவினரால் ஆய்வு செய்யப்பட்ட 146 விண்ணப்பங்களுக்கு 134 ஹெக்டேரில் நுண்ணீர் பாசனம் மானியம் ரூ.65.48.869ஐ விடுவிக்க கட ந்த 31ம் தேதி நடந்த மாவட்ட இயக்கக்குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள் ளது.எனவே சிறு, குறு விவசாயிகள் தற்போது வயல்களில் நுண்ணீர் பாசன கருவிகளை அரசு மானிய உதவியோடு நிறுவி பயன டைய சம்பந்தப்பட்ட வட் டார தோட்டக்கலை, வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகலாம்.

மேலும் தோட்டக்கலை, வேளாண்மைத்துறை அலுவலர்கள் 2013 டிசம்பருக்குள் அரசால் வழங்கப்பட்ட குறியீட்டின்படி நுண்ணீர் பாசன கருவிகளை நிறுவி சாதனை புரியுமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தேசிய மூங்கில் இயக்க திட்டத்தில் வளமில்லாத தனியார் நிலங்களிலும், வளமில்லாத பொது இடங்களிலும் முள் இல்லாத மூங்கில் கன்றுகளை மானியத்தில் நடவு செய்ய 30 ஹெக்டேர் இலக்கு பெறப்பட்டுள்ளது. தேசிய மூலிகை பயிர்கள் இயக்க திட்டத்தில் 30 ஹெக்டேரில் காந்தல் (கண்வலி கிழங்கு) மற்றும் 10 ஹெக்டேரில் மருந்து கூர்க்கன் கிழங்கு (கோலியஸ்) ஆகியவை மானிய உதவி யோடு சாகுபடி செய்ய இல க்கு அரசிடமிருந்து பெறப்பட்டது. தேவைப் படும் விவசாயிகள் தோட்டக் கலை உதவி இயக்குனரை அணுகி விபரம் பெறலாம்.

**கலைநிகழ்ச்சி மூலம் மழைநீர் சேகரிப்பு திட்ட பிரசாரம்**

தாரமங்கலம்: பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பழனியம்மாள் உத்தரவின்படி தாரமங்கலம் பேரூராட்சியில் மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்து கலைநிகழ்ச்சிகள்

மூலம் பிரசாரம் செய்யப்பட்டது. தாரமங்கலம் பேருந்து நிலையத்தில் மதுரை பிரசார குழுவினர் மழைநீர் சேகரிப்பு தொட்டி எவ்வாறு அமைப்பது எப்படி என்பது குறித்து கலைநிகழ்ச்சி மூலம் செய்முறை விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில், பேரூராட்சி தலைவர் பாலசுந்தரம் தலைமை வகித் தார். துணைத்தலைவர் தனபால் உறுப்பினர்கள் பழனிசாமி, அகிலாண்டேஸ்வரி, கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர். செயல் அலுவலர் உமாகாந்தன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**விவசாயிகளுக்கு காலாவதியான விதைகளை விற்றால் கடும் நடவடிக்கை அதிகாரி எச்சரிக்கை**

சேலம்: சேலம், நாமக்கல் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு காலாவதியான விதைகளை விற்கும் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து விதை ஆய்வு துணை இயக்குநர் சௌந்தர்ராஜன் தெரிவித்திருப்பது:

முளைப்புத்திறன் இல்லாத காலாவதியான விதைகளை இருப்பு வைத்து விற்பனை செய்யக்கூடாது. விபர அட் டை இல்லாத அல்லது அட்டையில் குறைபாடுள்ள விதைகளை விற்க கூடாது. சுத்தம் செய்யப்படாத விற்பனைக்கு தடை செய்யப்பட்ட விதைகளை விற்பனை செய்யக்கூடாது.

ஆதாரமற்ற விதைகளை இருப்பு வைத்து விற்க கூடாது. விதைகளுக்கு முளைப்பு சோதனை அறிக்கை இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. வெளிமாநில விதைகளை படிவம் 11 இல்லாமல் விற்க கூடாது. விதை விற்பனை உரிமம் பெறாமலோ அல்லது விதை விற்பனை உரிமம் இல்லாத இடத்திலோ விதைகளை இருப்பு வைத்து விற்பனை செய்யக்கூடாது. விதிமுறைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் மாற்றுப்பயிர் வாய்ப்புகளை அறிந்து கொள்ள வேண்டும் வேளாண் அதிகாரி பேச்சு**

தஞ்சை: விவசாயிகள் மாற்றுப்பயிருக்கான வாய்ப்புகள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என தோட்டக்கலைத்துறை ஆணையர் சத்தியபிரதா கேட்டுக்கொண்டார்.தஞ்சை இந்திய பயிர் பதன தொழில்நுட்ப கழக கூட்ட அரங்கில் நேற்று வாழை சாகுபடி தொடர்பான 2வது ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. வாழை சாகுபடி மற்றும் பதனிடும் முறைகள் குறித்த கண்காட்சியை தோட்டக்கலைத்துறை ஆணையர் சத்தியபிரதா பார்வையிட்டார்.
பின்னர் அவர் பேசுகையில், 'தமிழகத்தில் வாழை உற்பத்தியை பெருக்க விவசாயிகள் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதுபோன்ற கருத்தரங்குகள் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடத்தப்படுகிறது. வருமானம், சுற்றுச்சூழல் மற்றும் கிடைக்கக்கூடிய லாபம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு புதிய உற்பத்தி முறைகளை கையாள்வதற்கு முயற்சி செய்கிறோம். விஞ்ஞான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி செய்தல், தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்தல் ஆகியவற்றை கவனத்தில்கொண்டு தேவையான யுக்திகளை கையாள வேண்டும். விவசாயிகள் மாற்றுப்பயிருக்கான வாய்ப்புகள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும்' என்றார். இதைதொடர்ந்து கலெக்டர் பாஸ்கரன் பேசினார்.

**ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்தினால் அதிக மகசூல் வேளாண் அறிவியல் மையம் தகவல்**

வேப்பந்தட்டை: பருத்தி சாகுபடியில், ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண் அறிவியல் மையம்

தெரிவத்துள்ளது. பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டாபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) கதிரவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பயிராக பருத்தி அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தற்போது கோடை உழவு செய்து, மழை பெய்தவுடன் அடிவுரமிட்டு பருத்தி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆயத்தமாக உள்ளனர். அடி உரமிடும்போது, ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்தினால் உரச் செலவை குறைப்பதோடு மட்டுமின்றி மகசூலையும் அதிகரிக்கலாம். பருத்தி சாகுபடிக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் தயார் செய்ய ஒரு ஹெக்டேருக்கு 750 கிலோ அளவுள்ள நன்கு மக்கிய தொழு உரத்தை எடுத்து கொள்ள வேண்டும். பிறகு பருத்தி சாகுபடி செய்யும் வயலின் மண் பரிசோதனையின் பரிந்துரையின்படி அடிஉரமாக இடும் உரங்களில் மணிச்சத்து தரவல்ல, சூப்பர் பாஸபேட் உரத்தை முழு அளவையும் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு தொழு உரத்தை மூன்று சம பாகமாகவும், சூப்பர் பாஸ்பேட்டை இரண்டு சம பாகமாகவும் பிரித்து கொண்டு கீழே ஒரு பங்கு தொழு உரம், பிறகு ஒரு அடுக்கு சூப்பர் பாஸபேட், அடுத்து தொழு உரம், மீதமுள்ள ஒரு பங்கு சூப்பர் பாஸ்பேட் என அடுக்கடுக்காக பரப்பி மண்வெட்டி கொண்டு தொழு உரமும், சூப்பர் பாஸபேட்டும் நன்கு கலக்கும்படி செய்ய வேண்டும். பிறகு தொழு உரத்தின் ஈரப்பதம் இல்லையெனில் சிறிது தண்ணீர் கலந்து நிழலான பகுதியில் குவித்து வைக்க வேண்டும்.

பிறகு இதன் மேல்பகுதியில் களிமண் சேற்றை பூசி, மெழுகி 30 நாட்கள் அப்படியே வைத்திருக்க வேண்டும். இப்படி செய்யும்போது தொழு எருவில் உள்ள நுண்ணுயிர்களும், அமிலங்களும் சூப்பர் பாஸ்பேட்டான மணிச்சத்தை பருத்தி பயிரானது விரைவில் எடுத்துக் கொள்ளகூடிய அங்கக பாஸ்பேட்டாக மாறுவதோடு தொழு எருவுடன் மண் பரிசோதனை பரிந்துரைப்படி பருத்தி

சாகுபடிக்கு அடியுரமாக இடும் தளைச்சத்தான யூரியா, சாம்பல் சத்தான பொட்டாஷ் ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து நன்கு கலக்கி கடைசி உழவிற்கு முன் அடியுரமாக பயன்படுத்த வேண்டும். மண் பரிசோதனை செய்ய இயலாதபோது, ஒரு ஹெக்டேருக்கு 375 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை தொழு உரத்துடன் ஊட்டமேற்றிய பிறகு, 130 கிலோ யூரியா, 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை கலந்து அடியுரமாக பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் அதிக அளவு தொழு உரம் இடுவதற்கு பதிலாக குறைந்த அளவு ஊட்டமேற்றிய தொழு உரமே போதுமானது. இதனால் சத்துகள் வீணாகாமல் உடனடியாக பயிர்களுக்கு கிடைப்பதால் பயிர்கள் நன்கு செழித்து வளர்கிறது. மேலும் இந்த முறையில் உரமிடுவதால் மகசூலானது 15 முதல் 20 விழுக்காடு வரை அதிகரிக்கிறது. எனவே, விவசாயிகள் ஊட்டமேற்றிய தொழு உரத்தை பயன்படுத்தி பலனடைய வேண்டுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வீரிய ரக மாங்கன்றுகள் விநியோகம்**

விருத்தாசலம்: விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விருத்தாசலம் வட்டாரத்தில் தோட்டக்கலை துறையின் மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் மா ஒட்டுச்செடிகள் நடவு செய்வதற்கான மானியம் வழங்கப்பட உள்ளது. விவசாயிகளுக்கு வழங்க நீலம், பெங்களூரா, காலபாடு, பங்கனபள்ளி, அல்போன்சா போன்ற ரக மா ஒட்டுச்செடிகள் நெய்வேலி அரசு தோட்டக்கலை பண்ணையில் தயார் நிலையில் உள்ளது. இதை தேவையான விவசாயிகள் வாங்கி பயனடையலாம். இதில் மா புதிய பரப்பு திட்டத்தின் கீழ் புதிதாக மா நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 100 மா கன்றுகள் வழங்கப்பட உள்ளது. மேலும் இரண்டு ஆண்டுக்கு பராமரிப்பு மானியமும் வழங்கப்பட உள்ளது. அதேபோல் பழைய தோட்டம் புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் தோப்புகளில்

காலியாக உள்ள இடங்களுக்கு நடுவதற்காக ஒரு ஹெக்டேருக்கு 100 கன்றுகள் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் தக்க ஆவணங்களுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் விவசாயிகளின் தேவை பதிவேட்டில் பதிவு செய்து பயன்பெறலாம்.

**காட்டுமன்னார்கோவில் பகுதியில் விதை நெல் தட்டுப்பாடு**

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் பகுதியில் வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பயிர் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததாலும், கடுமையான வறட்சி ஏற்பட்டதாலும் விவசாய பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாயிகள் மிகுந்த சிரமங்களுக்கு இடையே குறுகிய கால பயிரான ஆந்திரா பொன்னி என்று அழைக்கப்படும் பிபிடி என்று அழைக்கப்படும் நெல் ரகத்தை பயிரிட்டனர். இந்த நெல் ரகம் குறைந்த மகசூல் கிடைத்தாலும் 62 கிலோ மூட்டை ஒன்று சுமார் ஆயிரத்து 500 வரை விற்பனை செய்யப்பட்டது. இதை அறிந்த விவசாயிகள் இந்த நெல் ரகத்தையே இந்த ஆண்டும் பயிர் செய்ய மிகத் தீவிரமாக உள்ளனர்.

தற்போது மேட்டூர் அணை நிரம்பி உள்ளதாலும், சில தினங்களில் பாசனத்துக்கு திறக்கப்பட உள்ளதாலும், விவசாயிகள், விவசாய பணிகளை தொடங்கியுள்ளனர். சில கிராமங்களில் ஒவ்வொரு ஆண்டும் நேரடி நெல் விதைப்பு மூலம் நெற்பயிரை விதைத்து வருகின்றனர்.

இந்த விவசாயிகளுக்கு தற்போது வேளாண்மை துறை சார்பில் விதை நெல் கிடைக்காத காரணத்தினால் மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்கி விதைப்பு பணியை செய்ய துவங்கியுள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி கடந்த வாரம் வேளாண்மை துறை சார்பில் விற்பனைக்கு வந்த ஆந்திரா பொன்னி நெல் ரக விதை நெல் மூட்டைகள்

ஒரே நாளில் விவசாயிகளால் வாங்கி செல்லப்பட்டது. மீண்டும் விவசாயிகள் விதை நெல் மூட்டைகள் வேளாண்மை துறை சார்பில் விற்பனை செய்யப்படுமா என தொடர்ந்து எதிர்பார்த்து வருகின்றனர்.

எனவே, விவசாய பணிகளை தொடங்குவதற்கு ஏதுவாக ஆந்திரா பொன்னி என்ற நெல் ரகத்தை வேளாண்மை துறை சார்பில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.